# கிறிஸ்துவின் வசனம்

**கொலோ 3:16**

## (WORD OF CHRIST)

---


ஆசிரியர்  
சகோ அர்ச்சுனன் II கொரி 3:16

டிசம்பர்  
1992


---

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் இவ்விதழை படித்து அநேக சத்தியங்களை தெரிந்து கொண்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன் இவ்விதழ் வருகின்ற புதிய ஆண்டிலும் தொடர்ந்து கிடைக்க வேண்டுமானால் இன்றே ஒரு சிப்ளை கார்டில் உங்கள் முகவரியை எழுதி அனுப்பி பதிவு செய்து கொள்ளவும். இவ்விதழை படித்து முடித்தபின் மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இவ்விதழ் தேவையானால் முகவரியை எழுதி அனுப்புங்கள். தொடர்ந்து இவ்வூழியத்திற்காக ஜெபியுங்கள். உங்கள் அனைவருக்கும்எனது புத்தாண்டு வாழ்த்துக்களைதெரிவித்துக்கொள்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்

ஆசிரியர்

# சத்தியம்

## (TRUTH)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று யோவா 8:32-ல் சொல்வதை வாசிக்கிறோம். ஏன் அன்பு சகோதரரே; சத்தியம் என்றால் என்ன? உண்மை என்று சொல்கின்றோம். அந்த உண்மையை அறிவீர்கள் என்று ஆண்டவர் சொல்கின்றாரே. அந்த

உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இந்த வானத்தையும், பூமியையும் உண்டாக்கின நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய வசனமே சத்தியம் என்று யோவா 17 : 17-ல் கூறு கின்றார். இந்த வசனமாகிய சத்தியத்தை நீங்கள் உங்கள் வாழ்க்கை யில் எப்படி பயன்படுத்துகிறீர்கள்? சத்தியத்தை சத்தியமாக கைக்கொள்கிறீர்களா? அல்லது சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறீர்களா? உண்மையை ஒருபோதும் மறைக்க முடியாது. சத்தியவான் எவனும் சத்தம் கேட்கிறான் என்று யோவா 18:37-ல் சொல்கின்றார். நீங்கள் சத்தியத்தில் நடக்கிறேன் என்று சொன்னால் கிறிஸ்துவுக்கு செவி கொடுத்து அவர் எப்படி நடந்தாரோ அதே போல் நீங்களும் நடக்கவேண்டும். அப்பொழுது சத்தியமாகிய வசனம் உங்களை கடைசி நாளில் யோவா 12:48 விடுதலையாக்கும். இப்படி பட்ட ஒரு விடுதலை வேண்டுமானால் பிரிய நண்பரே இன்றே இந்த வேத சத்தியத்திற்கு உன்னை முற்றிலும் ஒப்புக்கொடு அப்பொழுது சத்திய தேவன். சத்தியபரராகிய கிறிஸ்து. சத்திய ஆவியானவர் (சங் 31:5, யோவா 14:16, யோவா 16:13) உங்களை முற்றிலும் விடு வித்து சத்திய வழியில் நடத்துவாராக!

ஒரு உதாரணத்தை சொல்ல விரும்புகிறேன்! வாரத்தின்முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை என்று சொல்கின்றோம். அதைநாம் அப்படி யல்ல சனிக்கிழமை முதல் நாள் என்று சொன்னால் அது உண்மை யாகுமா? (மத் 28:1) ஆகாது. அதேபோல் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவன் என்று சொல்லி இருக்க நீ இரட்சிக்கப்பட்டு விட்டாயா என்று ஞானஸ்நானம் எடுக் காத ஒரு நபரை பார்த்து கேட்பதும் உண்மையாகுமா? ஆகாது பிரிய நண்பரே! சத்தியத்தை சத்தியமாகவே படிக்க வேண்டும் தவிர நம் எண்ணங்களையும், யோசனைகளையும் புகுத்திவிடக் கூடாது ஏன்? ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன் 1 பேது 4:11 என்று வேதம் எச்சரிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே சத்தியமாகவே படிக்க வேண்டும். ஆகவே நாம் நம்மைச்

சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை தேவனுக்கு முன்பாக நிச்சயப்படுத்திக் கொள்வோமாக!

ஆமென்

## ★ சபை செய்திகள்

சென்றமாதம் 15-ந் தேதி சகோதரி ஞானோரி அவர்கள் கிறிஸ்துவின் உபதேச சட்டங்களுக்கு கீழ் படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் இவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை ஊழியர் சகோ. **அர்ச்சுனன்** ஆவார்.

இம்மாதம் 26 ம் தேதி வழக்கம் போல் சுவிஷேசக்கூட்டம் மாலை 5.00 மணிக்கு வத்தலக்குண்டில் கணவாய்பட்டி ரோடு தண்ணீர் டாங்கு சமீபம் உள்ள கிறிஸ்துவின்சபையார் கூடுமிடத்தில் நடைபெறும், தவறாது கலந்து கொண்டு பயன்பெறுங்கள்.

## ★ ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்

யாக் 5:16

வருகின்ற புத்தாண்டில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறவிருக்கிற ஆத்துமாக்களுக்காக.

## ★ அழைப்பு

புதுவருட ஸ்தோத்திர கூட்டத்திற்கு உங்கள் யாவரையும் அன்போடு அழைக்கிறோம். நேரம் இரவு 10-00 முதல் காலை 3-00 வரை

## ★ பரிசு

நவம்பர் மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் பரிசு பெற்றவர்கள்: Sis R. **கீதா** பட்டிவீரன்பட்டி
**Sis பிரிசில்லாதாஸ்** K. பாலாடர், சிறுவர்: **V. அனிதா** சொக்கலிங்கபுரம்

## ★ சென்ற இதழின் விடைகள்

1. 15 முழம் ஆதி 7:20
2. மதிலா^த^யாத் 14:22
3. நீ யுத்த மனுஷனாயிருந்து இரத்தத்தை சிந்தினாய் 1 நாளா 28:3
4. அவைகள் தேவர்கள் அல்லவே ஓ^எ^ரே 16:20
5. கர்த்தர் அப் 2:47
6. ஐத்திகு
7. அந்தியோகியாவில்
8. பரலோகத்திலிருக்கிறது
9. ஒன்பது
10. தேவ ஆவியினால்

✶ இம்மாத வேத அறிவுப் போட்டி:

1. மோசேயை அடக்கம் பண்ணினது யார்? எங்கே?
2 உதடுகளின் மதுரம் எதைப் பெருகப் பண்ணும்?
3. எவ்வகையான நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்?
4. எது சத்தியம்?
5. வேலை செய்ய மனதில்லாதவன் என்ன செய்யக்கூடாது?
6. நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றது யார்?
7. எவ்வகையான ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்?
8. ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையானவன் யார்?
9. கர்த்தர் வருஷத்தை எவற்றால் முடிசூட்டுவார்?
10. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதியவர் யார்?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடைமட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுதுபவருக்கு பரிசு அனுப்பப்படும்.

If undelivered Please return to:

THE EDITOR

**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU. Anna Dt.**

---

**For Private Circulation only.**

---

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Press Batlagundu-624202.